රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை
Independence Square, Colombo 07, Sri Lanka


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | MPA/PSD/Grade I Promo/2020 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2022.07.21 |

அமைச்சின் செயலாளர்கள்

மாகாண சபைகளின் தலைமை செயலாளர்கள்

மாவட்ட செயலாளர்கள்

**இலங்கை திட்டமிடல் சேவை தரம் I பதவிகளின் பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கான நியமனம்**

இலங்கை திட்டமிடல் சேவையில் தரம் I பதவிகளுக்கான பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கான நியமனங்களை செய்யும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இதன்பின்னர் பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கான நியமனங்களை செய்யும்போது அந்த நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/APP/11/5/7/2022 ஆம் இலக்க மற்றும் 2022.07.05 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

02. அந்த நடைமுறைகளை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் https://psc.gov.lk என்ற உத்தியோகப்பூர்வ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

03. அதன்படி, அலுவலகங்களில் இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் I பதவிகளுக்கான பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் நியமனங்களைச் செய்ய நீங்கள் எதிர்பார்த்தால், அதற்கான விண்ணப்பங்களை கோரும் அறிவிப்புகளைத் தயாரித்து உங்கள் அலுவலக உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வெளியிடுமாறும் அதன் பின்னர் அவற்றை மேற்படி நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுவதற்காக **கட்டாயமாக** எனக்கு அனுப்பி வைக்குமாறும் மேலும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ கே.டி.என். ரஞ்சித் அசோக

மேலதிக செயலாளர் (பொது நிர்வாகம்)

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பதிலாக

பிரதி:

i. செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - தயவுசெய்து தகவலுக்காக


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| දුරකතන<br>தொலைபேசி<br>Telephone | 011-2696211-13<br>011-2166000 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2695279 | ඊ-මේල්<br>மின்னஞ்சல்<br>E-mail | info@pubad.gov.lk | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்<br>Website | **www.pubad.gov.lk** |